6th November 1965]

பேசிய நேரத்தில் குறிப்பிட்டார்கள். அந்த வகையில், மிகப் பின் தங்கிய சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரியைத் துவக்கு வதில் முதல் இடம் அளிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நெருக்கடி நிலையையொட்டிக் கோவைப் பிரமுகர்களிடம் நான் சொல்லியிருக்கிறேன். அடுத்த ஆண்டிலே மருத்துவக் கல்லூரியை அமைக்கவேண்டுமென்றால், குறைந்தபட்சமாக 25 லட்ச ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தால் நாங்கள் முதல் ஆண்டிலேயே மருத்துவக் கல்லூரியைக் கோவையில் தொடங்க முடியும் என்று சொல்லியிருக்கிறேன். அம்மாதிரி நான் சேலத்திலே எதிர்பார்க்க முடியாது. அது தான் நிலைமை.

திரு. ம. கமலநாதன் : இரயில்வே செஸ் நிதியிலுள்ள 25 லட்சம் ரூபாயை மருத்துவக் கல்லூரிக்காக நாங்கள் ஒதுக்கி வைத்து விட்டோம். பஞ்சாயத்து யூனியனுடைய சில்லறை வேலைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதை விட, மருத்துவக் கல்லூரியைத் துவக்க அந்தத் தொகையைப் பயன்படுத்தி, அதற்கு முதலிடம் கொடுக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பதில் பயன் இல்லை. இரயில்வே செஸ் பணத்தைப் பற்றி முன்பே முடிவு செய்யப்பட்டுவிட்டது. ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கிராமங்களில் எவ்வளவோ வேலைகள் செய்ய வேண்டியிருக்கின்றன. அவற்றுக்காக அந்தத் தொகை ஒதுக்கப்படவேண்டும்.

" நர்சுகள் " பயிற்சி

* 329 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மருத்துவத் தாதிகள் (Nurses) தங்களுடைய பயிற்சிக் காலத்திலும், கட்டாய சேவைக்காலத்திலும் திருமணம் செய்துக்கொள்ளக்கூடாது என்று கட்டுப்பாடு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதனை தளர்த்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) செவிலியர் (Nurses) தங்கள் பயிற்சிக் கால அளவாகிய மூன்றரை ஆண்டுக் கால அளவிலும் அவர்கள் ஒப்பந்தப் பணிக்காலத்தில் முதல் ஆறு மாதக் கால அளவிலும், திருமணம் செய்துக் கொள்ள அனுமதிக்கப் படுவதில்லை. இக்கால அளவில் மருத்துவச் செவிலி ஒருவர் திருமணம் செய்து கொண்டால், அவர் முன் அறிவிப்பு இன்றி பயிற்சிப் பள்ளியை அல்லது செவிலிப் பணியை விட்டுவிட்டதாகக் கருதப்படுவார்.

(இ) இல்லை.

[6th November 1965

திரு. செ. மாதவன் : இந்த ஒப்பந்த காலம் ஆறு மாதம் என்று இருப்பதை மீண்டும் உயர்த்துவதாக உத்தேசம் உண்டா? அல்லது, குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆறு மாத காலத்தை உயர்த்துவதற்கோ குறைப்பதற்கோ அரசாங்கத்திற்கு உத்தேசம் ஏதும் இல்லை.

• • • • •

உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டம்

*330 **கேள்வி.— திரு. ஆர். அப்துல் கலீல் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவு கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 1964-ம் ஆண்டில் தண்டிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Total number of persons convicted—3,512. Number of persons convicted districtwise is as follows :—

Name of district.	*Number of persons.*
Madras	1,355
Chingleput	192
Coimbatore	344
Madurai	178
North Arcot	128
The Nilgiris	91
Ramanathapuram	121
South Arcot	192
Salem	201
Thanjavur	276
Tiruchirappalli	159
Tirunelveli	212
Kanyakumari	63
Total ..	3,512

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, கலப்படத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தது தவிர, இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறதே, அம்மாதிரி ஏதாவது உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

திரு. வை. சங்கரன் : மஞ்சளுக்கு நிறம் கொடுப்பதற்காக லெட் அசிடேட் என்ற பொருளைச் சேர்ப்பதாகவும், நாட்டுச் சர்க்கரைக்கு நிறம் கொடுப்பதற்காக ஏதோ ஒரு பொருளைச் சேர்ப்பதாகவும் தெரிகிறது. 'ப்ளோஸ் ஆஃப் ஆரிஜின்' இலேயே

* * * * Expunged as ordered by the Chair.